# பண்பாட்டை மொழிபெயர்த்தலும் சிக்கல்களும்: தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சிங்கள நாவல்களை அடிப்படையாகக் கொண்டவொரு ஆய்வு


**Supervisor**
*Dr. AFM. Ashraff,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. CHF. Shifana,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


பண்பாடு என்பது வாழ்க்கை முறை (way of life). ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும். பண்பாட்டை வெளிப்படுத்தும் வரலாற்று மூலங்களில் இலக்கியமும் ஒன்று. அதிலும் நாவல் இலக்கியம் சிறப்பு வாய்ந்தது.
எனவே, நாவல்களை மொழிபெயர்ப்பதால் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை பிற சமுதாயத்தினரும் அறிந்து கொள்ளலாம். ஆனால் நாவல்களில் பண்பாட்டு மொழிபெயர்ப்பென்பது கூறுவதுபோல் இலகுவானதல்ல. அவ்வடிப்படையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள குறிப்பிட்ட சில சிங்கள நாவல்களை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு மொழிபெயர்ப்பிலுள்ள சிக்கல்களையும் அதற்கான காரணங்களையும் ஆராய்வதாய் இவ்வாய்வு அமைந்துள்ளது.

நாவல்களில் பண்பாட்டு மொழிபெயர்ப்பின் அவசியத்தை உணர்த்தல், சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பு நாவல்களில் பண்பாட்டை மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்பாளர் எதிர்நோக்கியுள்ள சிக்கல்களையும், அதற்கான காரணங்களையும் கண்டறிதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்களின் நாவல்கள், புத்தகங்கள் முதலியன முதலாம்நிலைத் தரவுகளாகவும் இவ்வாய்வேடு தொடர்பான சில ஆய்வுக்கட்டுரைகள், கட்டுரை முதலியன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படவுள்ளன. இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், விளக்கமுறை, ஒப்பீட்டு ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்படும்.

இக்காலத்தில் சிறுகதை, கவிதை, நாடகம் என்பவற்றைவிட நாவல்கள்தான் சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்குமிடையேயுள்ள நெருங்கிய அடிப்படையான உறவுகளை ஆராய்ந்து, பாத்திரங்களின் வர்க்கவேர்களைக் கண்டறிந்து உயிர்த்துடிப்புள்ள வளர்ச்சி நிறைந்த மனிதனையும் அவனுக்கான பண்பாட்டையும் காட்டுகின்றன. எனவே, இந்நாவல்களை மொழிபெயர்ப்பதன் மூலம் உலகப் பண்பாடுகள் ஒவ்வொன்றையும் அறிந்து விளங்கிக் கொள்ளலாம். அதனூடாக உலகளாவிய ஒரு பொதுப் பண்பாட்டை உண்டாக்கலாம். அதற்கான சாத்தியப்பாடுகளை திட்டவட்டமாக ஆராய்வது இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகவுள்ளது.



**Key Words:** பண்பாடு, மொழிபெயர்ப்பு